## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.

Prosecution witness for P.W.5.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துராமலிங்கம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2025.

A3, 5, 7, 8 absent. 317 Crpc petition filed. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது செய்துங்கநல்லூரில் குடியிருந்து டீக்கடையில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சுடலைமுத்து என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு சுமார் 10.40 மணியளவில் எங்கள் ஊர் இரயில்வே கேட் அருகில் எனது தம்பியான இறந்துபோன சுடலைமுத்து, மற்றொரு தம்பி ரமேஷ், அழகுகிருஷ்ணன், வீரபாகு ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் அரிவாளுடன் அங்கு வந்து பழிக்கு பழியாக எங்களை கொலை செய்ய வந்திருக்கிறீர்களா என்று கேட்டு மேற்படி சுடலைமுத்துவை அரிவாளால் தாக்கி அவர் வெட்டுக்காயங்களுடன் இருந்தபோது அ.சா.2 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சுடலைமுத்து அனுமதிக்கப்பட்டதாகவும், மேல்

சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகவும், பின்னர் 05.01.2016 அன்று மேற்படி சுடலைமுத்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை நான் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், ஏற்கனவே எங்கள் வீட்டில் இருவரை கொலை செய்துவிட்டதால் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.23 17:14:17 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.9/2022.
Prosecution witness for P.W.6.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. நம்பி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2025.

A3, 5, 7, 8 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கால்வாயில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன சுடலை முத்துவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீஸ் விசாரணையில் 24.12.2015 அன்று இரவு சுமார் 10.40 மணியளவில் எங்கள் ஊர் இரயில்வே கேட் அருகில் மேற்படி சுடலைமுத்து மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் சிலர் நின்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அரிவாள்களுடன் அங்கு வந்து ஒரு பட்டமுத்து மற்றும் சண்முகத்தேவர் ஆகியோரை எதிரிகள் கொலை செய்ததற்காக பழிவாங்குவதற்காக இங்கு வந்திருக்கிறீர்களா என்று எதிரிகள் கேட்டு மேற்படி சுடலைமுத்துவை அரிவாளால் தாக்கியதாகவும், பிறகு அ.சா.2 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி மேற்படி சுடலைமுத்து பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பிறகு மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக

மாற்றப்பட்டதாகவும், அங்கு சிகிச்சை பலனின்றி மேற்படி சுடலைமுத்து 05.01.2016 அன்று இறந்துவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.23 17:14:27 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.